## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 17/2023 | Date : 08.08.2025 | PW 1 |
|---|---|---|
| Name: தமிழரசு | த/பெ.குமார் | |

### 3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எனது வயது, தொழில் வருமானம் காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வயதை காட்டுவதற்கு ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன். விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனம் ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். என் மீது இருசக்கர வாகனம் மோதியது என்றால் சதிான். என் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையைதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் எண் TN 93 E 7801 அந்த வாகனத்தின் உரிமையாளரும் ஓட்டுநரும் நான்தான் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தான் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வலதுபுறமாக திரும்பியபோது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தலை கவசம் அணியவில்லை என்றாலும் என் தலையில் காயம் ஏற்பட்டது என்றாலும் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் அபராதம் செலுத்தியதாக உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்து 2 நாட்கள் கழித்துதான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது அஜாக்ரதையால் விபத்து ஏற்பட்டது என்றாலும் அதனால்தான் 2 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவ குறிப்புகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் இல்லாமல் தலைகவசம் அணியாமல் வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதால் எனக்கு நஷ்டஈடு வழங்க எதிர்மனுதாரர்கள் கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியதாக கூறும் இருசக்கர வாகனம் எண். TN 43 M 5311 என்ற வாகனத்தின் ஓட்டுநருக்கு(2ம் எதிர்மனுதாரர் தமிழரசு) விபத்து காலத்தில் தகுந்த செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாததால் வாகனத்தின் உரிமையாளர் பாலிஸி விதிகளை மீறியுள்ளார் என்பதால் 3ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமை பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

### மறுவிசாரணை இல்லை

ஒம்/—தமிழரசு

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/— R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.